செய்தி வெளியீடு எண் : 1418 நாள்:24.12.2021

**<u>செய்தி வெளியீடு</u>**

மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் அவர்களின் அறிவுரையின்படி பின்வரும் செய்தி குறிப்பு வெளியிடப்படுகிறது. தமிழ்நாடு திருமணங்கள் பதிவுச் சட்டம், 2009–ன் கீழ் திருமணங்கள் பதிவு செய்வதற்கு இணையதள வழி விவரங்களை பதிவேற்றம் செய்யும்போது திருமணம் நடைபெறும் மாநிலம் என்ற பகுதியில் 'தமிழ்நாடு' என்ற தேர்வு மட்டுமே நிரந்தரமாக குறிப்பிடப்படுவதாகவும், வேண்டுதலுக்காக பிற மாநிலங்களில் உள்ள கோவில்களில் திருமணங்கள் செய்து கொள்ளும் நேர்வுகளில், இந்த திருமணத்தை பதிவு செய்வதற்காக விவரங்களைப் பதிவேற்றம் செய்யும்போது மாநிலத்தின் இடத்தில் தமிழ்நாடு தவிர பிற மாநிலங்களைத் தேர்வு செய்ய முடியவில்லை எனவும், இதனால் வெளிமாநிலங்களில் நடக்கும் தமிழக தம்பதிகளின் திருமணங்களைப் பதிவு செய்ய முடியவில்லை எனவும் ஒரு செய்தித்தாளில் தவறாக செய்தி வந்துள்ளது.

பல மதங்களைச் சார்ந்த இந்திய குடிமக்களின் திருமணங்களும் திருமணம் நடைபெறும் மாநிலத்தில் கட்டாயம் பதிவு செய்ய அந்தந்த மாநிலங்களில் வழிவகை செய்யப்பட வேண்டும் என்ற உச்சநீதிமன்ற அறிவுறுத்தலின்படி தமிழக அரசால் தமிழ்நாடு திருமணங்கள் பதிவுச் சட்டம், 2009 (தமிழ்நாடு சட்டம் 14/2009) இயற்றப்பட்டது. தமிழ்நாட்டில் நடந்த திருமணங்களை மட்டுமே இந்த 2009ஆம் ஆண்டைய சட்டத்தின்கீழ் பதிவு செய்ய இயலும். இப்பதிவுக்கான மென்பொருளும் இதற்கேற்றவாறு வடிவமைக்கப்பட்டுள்ளது.

திருமணம் நடைபெறும் பகுதி எல்லைக்குரிய பதிவு அலுவலகத்தில் மட்டுமே தமிழ்நாடு திருமணங்கள் பதிவுச் சட்டம், 2009–ன் கீழ் திருமணம் பதிவு செய்து கொள்ள இயலும் என்றிருந்த நிலையில், கடந்த 2020ஆம் ஆண்டு இச்சட்டத்தில் உரிய திருத்தம் மேற்கொள்ளப்பட்டது. அத்திருத்தத்தின்படி திருமணம் நடைபெற்ற பகுதி அல்லது மணமகன் / மணமகள் இருவரது நிரந்தர வசிப்பிடங்கள் அமைந்துள்ள பகுதி எல்லைக்குரிய பதிவு அலுவலகங்கள் இவை மூன்றில் ஏதாவது ஒரு சார்பதிவாளர் அலுவலகத்தில் தமிழ்நாட்டில் நடைபெற்ற திருமணத்தை தமிழ்நாடு திருமணங்கள் பதிவுச் சட்டத்தின் கீழ் பதிவு செய்து கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.

மேலும், தமிழ்நாட்டிற்கு வெளியே பிற மாநிலங்களில் நடைபெறும் திருமணங்களை அந்தந்த மாநிலங்களில் உள்ள கட்டாய திருமணப் பதிவு சட்டங்களின் கீழ் பதிவு செய்து கொள்ளலாம் அல்லது ஏற்கனவே நடைமுறையில் உள்ள இந்து திருமணச் சட்டம், 1955 மற்றும் தனி திருமணச் சட்டம், 1954 ஆகிய ஏதேனும் ஒரு சட்டத்தின் கீழ் தமிழ்நாட்டிலேயே பதிவு செய்து கொள்ளலாம் என்பதும் பொதுமக்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**